THE HON. SRI V. RAMAIAH : (*a*) There was scarcity of stamps under a few denominations on 26th July 1966 in the Sub-Treasury at Perambalur.

(*b*) The shortage was due to non-receipt of the indented supplies from the Nasik Press. In view of the general shortage of stamps and stamp papers in the State, the matter was taken up with the Government of India who have been requested to take suitable measures to make adequate supply of stamp paper. There is adequate stock at present to meet the public demand.

திரு. செ. மாதவன் : ஸ்டாம்ப் வெண்டர் மூலமாக இல்லாமல் சர்க்காரே நேரடியாக விநியோகிக்கலாம் என்ற கருத்து பரிசீலிக்கப்பட்டதா ? அப்படியானால் எந்த நிலைமையில் அப்பரிசீலனை இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. து. ப. அழகமுத்து : சென்ற தடவை கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தபோது கூட, இந்தப் பத்திரங்கள் குறைவாக இருப்பதால் நாசிக்குக்கு எழுதியிருக்கிறோம், நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். இன்னும் இவை பற்றாக் குறையாக இருப்பதால் மக்கள் மற்ற மாவட்டங்களுக்குச் சென்று வாங்க வேண்டிய கஷ்டத்தில் இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பற்றாக்குறையைப் போக்க அவசரமாக, உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவசர உடனடி நடவடிக்கையை அரசாங்கம் எடுத்தது. இதைப்பற்றி மத்திய அரசாங்கத்தோடு கடிதப் போக்குவரத்து நடத்தியதில் நமக்கு ஓரளவு அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சில இடங்களில் குறைபாடுகள் இருந்தால் அவை கவனிக்கப்பட்டு தீர்க்கப்படும்.

தண்ணீர் தண்டத் தீர்வை

*** 516 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தாம்பர பரணி, மணிமுத்தாறு நீரத்தில் தண்ணீர் தண்டத் தீர்வைக்கு உட்பட்டிருக்கும் புன்செய் ஒரு போகம் நிலங்களின் விவரம் என்ன ? (தாலூகா வாரியாக)

THE HON. SRI V. RAMAIAH : A statement[a] showing the extent of lands (single crop wet and dry) subject to penal water cess in Tambraparani and Manimuthar systems in Tirunelveli district, is placed on the Table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய விவரத்தில் இருந்து திருநெல்வேலி ஜில்லாவில் தண்ணீர் தண்டத் தீர்வைக்கு உட்பட்டிருக்கும் நிலம் 25,000 ஏக்கர்

[a] Printed as Appendix II on pages 716–717.

8th November 1966]

இருப்பதாகத் தெரிகிறது. அதிலே 8,000-க்கு மேற்பட்ட நிலத்திற்கு ஒரு ரேட்டுக்கு மேற்பட்ட தண்டத் தீர்வை விதிக்கப்படுவதாக விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய தண்டத் தீர்வையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று அரசாங்கத்திற்கு முறையீடு வந்திருக்கிறதா? இந்த நிலங்களை நன்செய்யாக மாற்ற அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா : அடிக்கடி இந்தக் கோரிக்கைகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. தாம்பிரபரணி, மணிமுத்தாறு சிஸ்டத்தைப் பொறுத்தவரை மற்ற சிஸ்டங்களோடு ஒப்பிட்டுச் சொல்லத் தயாராக இல்லை. இங்கிருக்கக்கூடிய விசேஷ முறையைப் பார்க்கும்போது இங்கு மூன்று சாகுபடிகள் நடக்கின்றன. அட்வான்ஸ் கார், கார், பிஷாணம் என்று மூன்று சாகுபடிகள் நடக்கின்றன. தண்ணீர் கொடுக்கிறபோது அட்வான்ஸ் காருக்கு குறிப்பிட்ட இலக்கு வைத்திருக்கிறோம். தண்ணீர் வந்தவுடனே யாருக்கு உரிமையில்லையோ அவர்களும் விவசாயம் செய்யத் தொடங்குகிறார்கள். இதனால் கார் சாகுபடி பாதிக்கப்படுகிறது. காருக்குத் தண்ணீர் கொடுக்கும்போது அதிலே உரிமை இல்லாதவர்கள் சாகுபடி செய்கிறார்கள். ஆகவே, இதிலே ஏற்படுகின்ற சிக்கல்களைத் தீர்க்க வேண்டுமென்ற முறையில் இருக்கக்கூடிய முறையை மாற்றியமைக்க தீர்க்கமான பரிசீலனை செய்து மாற்றியமைக்க வேண்டும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஒரு பக்கத்தில் தண்ணீர் வருஷா வருஷம் மழைக் காலத்தில் வீணாகிக் கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. அதே சமயத்தில் இரு போக நிலத்திற்கு மத்தியில் ஒரு போக நிலமும், நஞ்சை நிலமும் இருக்கின்றன. அதனால் தவிர்க்க முடியாத நிலையில் அவற்றையும் நன்செய்யாகப் பயிரிடக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்தக் கஷ்டத்தைக் காலா காலத்தில் போக்க அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தக் கஷ்டத்தை காலா காலத்தில் போக்க வேண்டுமென்றால் அங்கிருக்கக்கூடிய நிலைமைகளைச் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதிகமாகத் தண்ணீர் இருக்கும்போது அந்த நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வருவதில் சிரமம் இல்லை. தண்ணீர்ப் பற்றாக்குறை வரும் போது எல்லோருக்கும் கஷ்டம் வருகிறது. இதையெல்லாம் மனத்தில் வைத்துச் செய்யவேண்டும்.

புயலினால் சேதம்

*517 **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 30—4—1966 இரவு அடித்த புயலால் திண்டிவனம் வட்டம் வானூர் தொகுதியில் உயிர் இழந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் முறையே எத்தனை பேர்?